# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.

**Case No. CC.No. 148 of 2023**

**Prosecution Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: சரண்ராஜ்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated. 22.09.2025**

**முதல் விசாரணை**

நான் வசித்து அன்பிலில் வந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன மணிகண்டனை எனக்கு தெரியும். அவர் எனது மைத்துனர் ஆவார். கடந்த 08.01.2023 ம் தேதி மதியம் 03.30 மணியளவில் மணிகண்டன் அன்பிலில் மளிகை சாமான் வாங்க வந்திருந்தார். அவருடன் நான் பேசிக் கொண்டிருந்தேன். சேம்பருக்கு செல்வதாக சொல்லிவிட்டு மணிகண்டன் இருசக்கர வாகனத்தில் சென்றார். நான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் அவருக்கு பின்னால் 100 மீ தொலைவில் சென்றேன். இலால்குடி–செங்கரையூர் செல்லும் சாலையில் அரியூர் பஸ் ஸ்டாப் அருகில் உள்ள இடிந்த மண்டபம் அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலையின் இடதுபுறமாக மாலை 04.30–05.00 மணிக்குள் மணிகண்டன் சென்று கொண்டிருந்த போது கிழக்கிலிருந்து வந்த பொலிரோ பிக் அப் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து அதற்கு முன்னால் சென்ற காரினை முந்தி

சென்று எனது மைத்துனர் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அவருக்கு தலை, நெஞ்சு, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்திருந்தார். காலின் எலும்பு வெளியே தெரிந்த நிலையில் இருந்தது. பின் எனது உறவினர்களுக்கு போன் மூலமாக தகவல் சொன்னேன். பின்னர் அவரை இலால்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அதன்பின் இலால்குடி காவல் நிலையம் சென்று மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் கொடுத்தேன். அந்த புகார் மனுவானது அ.சா.ஆ.1/அ.சா.1 ஆகும். விபத்தை நான் நேரடியாக பார்த்தேன். ஆஜர் எதிரி தான் சம்பவ தினத்தன்று விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்தவர் ஆவார். அந்த வாகனத்தின் பதிவெண் 4990 ஆகும். போலீசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு பாதி வரை படித்துள்ளேன். நான் முதல் விசாரணையில் சொல்லிய விவரங்களை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் மனுவில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அ.சா.ஆ.1 புகார் மனுவை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. போலீசார் எழுதினர். புகார் மனுவில் நான் அன்பில் கிராமம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள N BRICKS சேம்பரில் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு N BRICKS என்று குறிப்பிடப்பட்டு இருந்தால் நான் கொடுத்த புகார் மனு இல்லை என்றால் புகார் நான் கொடுத்தது தான். புகார் மனுவில் சம்பவ சமயத்தில் விபத்தை

ஏற்படுத்தியதாக கூறப்படும் பொலிரோ பிக் அப் வாகனம் அதற்கு முன்னால் சென்ற காரினை முந்தி செல்ல முயலும் போது தான் விபத்து ஏற்பட்டது என குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன. நான் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சென்ற இருசக்கர வாகனம் எந்த கம்பெனியை சேர்ந்தது, அதன் பதிவெண் என்ன ஆகிய விவரங்களை புகார் மனுவிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது இருசக்கர வாகனம் எந்த கம்பெனியை சேர்ந்தது என்றால் Hero Honda Passion Pro இருசக்கர வாகனம் ஆகும். எனது மைத்துனர் ஓட்டி சென்ற வாகனம் XL 100 ஆகும். இலால்குடி–செங்கரையூர் ரோடு சம்பவ சமயத்தில் 15 அடி ரோடு என்றால் சரியல்ல. 20 அடி ரோடு ஆகும். விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்படும் வாகனத்திற்கு எந்த இடத்தில் சேதம் ஏற்பட்டது என்றால் முன்னால் உள்ள பம்பர் மற்றும் முகப்பு விளக்கு ஆகியவை சேதம் அடைந்திருந்தது. நான் விபத்து நடந்து 10 நிமிடங்கள் கழித்து சென்று பார்த்தேன். நான் பார்க்கும் போது எனது மைத்துனர் இலால்குடி–செங்கரையூர் மெயின் ரோட்டில் தென்புறம் உள்ள கொள்ளிடம் ஆற்றுக் கரையில் இருந்தார் என்றால் தென்புறம் உள்ள ரோட்டில் இருந்தார். இறந்துபோன மணிகண்டனை எதன்மூலம் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றால் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து சென்றேன். எனது மைத்துனருக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. விபத்தானது எனது மைத்துனரின் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது மைத்துனர் மது அருந்திவிட்டு இருசக்கர வாகனத்தை ஓட்டி பொலிரோ பிக்அப் வாகனத்தின் மீது மோதியதால் தான் விபத்து

ஏற்பட்டது என்றால் சரியல்ல. அரியூர் பஸ் ஸ்டாப் அருகே வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். வேகத்தடையிலிருந்து எவ்வளவு தூரத்தில் இடிந்த மண்டபம் உள்ளது என்றால் 100 மீ தொலைவில் உள்ளது. பொலிரோ பிக்அப் வாகனத்தில் ஜல்லிக்கட்டுக்கு சென்றுவிட்டு மாட்டை ஏற்றிக் கொண்டு திரும்பி வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வேகத்தடை 100 மீ தொலைவில் இருக்கும்போது கனரக வாகனத்தை இரண்டாவது கியரில் தான் இயக்க முடியும் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், இறந்துபோனவர் எனது மைத்துனர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2025.09.22 12:09:14 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 148 of 2023**

**Prosecution Witness : PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: வெற்றிசெல்வம்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated.22.09.2025**

**முதல் விசாரணை**

நான் வசித்து அன்பிலில் வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். விபத்தில் இறந்துபோன மணிகண்டனை எனக்கு தெரியும். கடந்த 08.01.2023 ம் தேதி நான் சொந்த வேலையாக அரியூர் சென்றுவிட்டு திரும்ப செங்கரையூர் செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் அரியூர் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள இடிந்த மண்டபம் அருகே வந்த போது விபத்தில் இறந்துபோன மணிகண்டன் சாலையின் இடதுபுறமாக XL இருசக்கர வாகனத்தில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்த போது மாலை 5 மணியளவில் அவருக்கு எதிர் திசையில் வந்த பொலிரோ பிக் அப் வாகனமானது அதற்கு முன்னால் சென்ற காரை முந்துவதற்காக வலதுபுறமாக ஏறி சாலையின் இடதுபுறமாக சென்ற மணிகண்டனின் இருசக்கர வாகனத்தின் முன்பக்கம் மீது அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து மோதி விபத்து நடைபெற்றது. அந்த விபத்தில் மணிகண்டனுக்கு தலை, நெஞ்சு, கால்

ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்திருந்தார். அ.சா.1 மணிகண்டனுக்கு பின்னால் 100 மீ தொலைவில் இருசக்கர வாகனத்தில் வந்தார். விபத்து குறித்த விவரத்தை போன் மூலமாக மணிகண்டன் அப்பாவிற்கு நானும், அ.சா.1ம் சொன்னோம். பின்னர் ஆம்புலன்ஸ் மூலமாக இலால்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். ஆஜர் எதிரி தான் சம்பவ தினத்தன்று விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்தவர் ஆவார். மறுநாள் போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

போலீசார் விசாரணையில் 08.01.2023ம் தேதி அன்று மாலை 5 மணியளவில் சொந்த வேலையாக அரியூர் பஸ் ஸ்டாப் அருகே இருந்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இடிந்த மண்டபம் அரியூர் பஸ் ஸ்டாப்பிலிருந்து 100 மீ தொலைவில் உள்ளது என்றால் சரியல்ல. 200 மீ தொலைவில் உள்ளது. அரியூர் பஸ் ஸ்டாப் அருகில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். நான் அரியூர் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்த போது தான் விபத்தை ஏற்படுத்தியதாக கூறப்படும் பொலிரோ பிக் அப் என்னை கடந்த சென்றது என்றால் சரிதான். அந்த வாகனத்தில் ஜல்லிக்கட்டுக்கு ஏற்றி சென்ற மாடு மற்றும் சில நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். 200 மீ முன்னால் சென்று கொண்டிருந்த பொலிரோ பிக் அப் வாகனத்திற்கு முன்னால் எந்த வாகனம் சென்று கொண்டிருந்தது என்று நான் நின்ற இடத்திலிருந்து பார்த்தால் தெரியாது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் நான் பொலிரோ பிக் அப் வாகனத்திற்கு பின்னால் சென்று கொண்டிருந்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அ.சா.1 எனக்கு தெரிந்தவர் என்றால் சரிதான். சம்பவம் நடந்து

கால் மணி நேரம் கழித்து தான் அ.சா.1 சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் சரியல்ல. 7 நிமிங்கள் கழித்து வந்தார். நான் பொலிரோ பிக் அப் வாகனத்திற்கு பின்னால் சென்று கொண்டிருக்கும் போது சத்தம் கேட்ட பிறகே நான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். அப்போது விபத்தில் காயம்பட்ட நபர் மணிகண்டன் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். விபத்தானது இறந்துபோன மணிகண்டனின் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், அ.சா.1 எனக்கு தெரிந்தவர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2025.09.22 12:09:36 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 148 of 2023**

**Prosecution Witness : PW3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: சுப்பிரமணியன்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated.22.09.2025**

**முதல் விசாரணை**

நான் வசித்து அரியூர் சேம்பரில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும் அவர் எனது மருமகன் ஆவார். விபத்தில் இறந்துபோன மணிகண்டனை எனது மகன் ஆவார். கடந்த 08.01.2023 ம் தேதி எனது மகன் இருசக்கர வாகனத்தில் அன்பிலில் ஜாமான்கள் வாங்குவதற்காக சென்றிருந்தார். திரும்ப ஊருக்கு வருவதற்காக அன்பில்–செங்கரையூர் செல்லும் சாலையில் எனது மகன் சென்றபோது ஆட்டோ மோதி விபத்து நடைபெற்றதாக அ.சா.1 போன் மூலமாகவும், நேரிலும் வந்து தகவல் சொன்னார்கள். சம்பவ இடம் சென்று போய் பார்த்த போது எனது மகனுக்கு தலை, நெஞ்சு, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு இறந்திருந்தார். பிரேத பரிசோதனைக்கு பின் அவரது உடலை பெற்றுக் கொண்டோம்.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)**– இல்லை

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2025.09.22 12:09:44 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 148 of 2023**

**Prosecution Witness : PW4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: மணிகண்டன்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated.22.09.2025**

**முதல் விசாரணை**

நான் வசித்து ஆதிகுடியில் வசித்து வந்து கணக்கு பிள்ளையாக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 08.01.2023 ம் தேதி அ.சா.3 மணிகண்டனுக்கு விபத்து ஏற்பட்டதாக போன் மூலமாக தகவல் சொன்னார். மறுநாள் 09.01.2023 ம் தேதி காலை 6 மணியளவில் நானும், எனது மேஸ்திரி சுப்பையன் என்பவரும் சம்பவ இடத்தை பார்க்க சென்றிருந்த போது போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி கொண்டனர். அந்த பார்வை மகஜரில் நானும், சுப்பையன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.2/அ.சா.4** ஆகும். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.3/அ.சா.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)</u>**

போலீசார் தகவல் சொல்லி நான் சம்பவ இடத்திற்கு வந்தேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்தை பார்க்க வந்திருந்தேன். நான் வருவற்கு முன்னால் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் வந்த பிறகு தான் போலீசார் வந்தார்கள். அந்த இடத்தை பொறுத்து கிழ மேல் மற்றும் வடக்கு, தெற்கு குறித்து என்னால் சரியாக சொல்ல முடியும் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு கிழக்கில் தான் அரியூர் பஸ் ஸ்டாப் உள்ளது என்றால் சரிதான். போலீசார் வரைபடத்தில் இடிந்த மண்டபத்திற்கு மேற்கு திசையில் அரியூர் பஸ் ஸ்டாப் உள்ளது என குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். அவ்வாறு குறிப்பிட்டு பார்வை மகஜர் தயார் செய்திருந்து அதில் நான் கையொப்பம் செய்திருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

ஒப்பம்/-சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2025.09.22 12:09:52 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி